# இருபத்தொன்பதாம் திருமுறை மாநாடு - 2009
## திருமுறைப் போட்டிகள்
**(http://www.singaithirumurai.org)**

அன்புடையீர், வணக்கம்.

கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளாகச் சிங்கப்பூரில் திருமுறை மாநாடு சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அதற்கு உங்களின் பேராதரவும் உணர்வுப் பூர்வமான ஈடுபாடுமே முக்கியக் காரணங்கள். உங்களின் தொடர்ந்த ஆதரவாலும் சைவத்தின் மீது நீங்கள் கொண்டுள்ள பற்றாலும் சிங்கப்பூரில் சைவமும் தமிழும் புத்தொளி பெற்று விளங்குகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இவ்வாண்டும் (2009) வருகிற ஜூலை மாதம் 24,25,26 தேதிகளில் இருபத்தொன்பதாம் திருமுறை மாநாடு சிறப்பாக நடைபெற உள்ளது. திருமுறைகளை இளையோரிடம் பரப்புவதை முதல் நோக்கமாகக் கொண்டு நடத்தப்படும் இப்போட்டிகளில் மாணவர்களும் மெய்யன்பர்களும் தரும் ஆதரவு சிறப்பாக உள்ளதால் கடந்த ஆண்டைப் போலவே இவ்வாண்டும் பெருமளவில் போட்டிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். வழக்கம்போல போட்டிகளில் திரளாகக் கலந்து கொள்ளுமாறும், போட்டியாளர்கள் போட்டியின் விதிகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்குமாறும், பெற்றோர்களும் ஆசிரியப் பெருமக்களும் முழு ஒத்துழைப்புத் தருமாறும் கேட்டுக்கொள்கிறோம். கடந்த ஆண்டைப்போல் இவ்வாண்டும் போட்டிகளுக்கு இணையத் தளத்தின் மூலமும் விண்ணப்பிக்கலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமுறைப் போட்டிகள் ஏற்பாட்டுக்குழுவின் சார்பில்,

டாக்டர் ஆ ரா சிவகுமாரன்
ஒருங்கிணைப்பாளர் - திருமுறைப்போட்டிகள்

## I. திருமுறை ஓதும் போட்டி

திருமுறை ஓதும் போட்டி நடைபெறும் இடங்கள்:
2-5-2009 சனிக்கிழமை, காலை 8.30: அருள்மிகு முனீஸ்வரர் ஆலயம் குயின்ஸ்வே
27-6-2009 சனிக்கிழமை, காலை 8.30: அருள்மிகு செண்பக விநாயகர் ஆலயம்

1. திருமுறை ஓதும்போட்டி 13 (R1-R11& GR12-GR13) பிரிவுகளாக நடத்தப்பெறும்.
2. போட்டிக்குரிய பாடல்கள் அருள்மிகு செண்பகவிநாயகர் ஆலய ஓதுவாமூர்த்தி யாயதி அவர்களால் பாடப்பட்டு ஒலிவட்டில் (Audio CD) பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த ஒலிவட்டுகளையும் விண்ணப்பத் தாள்களையும் அருள்மிகு செண்பக விநாயகர் ஆலயம், அருள்மிகு தண்டாயுதபாணி ஆலயம், அருள்மிகு ருத்திரகாளியம்மன் ஆலயம் ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளலாம்.
3. போட்டியில் பங்கு பெறுபவர்கள் தத்தம் பிரிவுகளுக்குள்ள பாடல்களில் இரண்டைத் திருவுளச்சீட்டு மூலம் தேர்ந்தெடுத்துப் பாடவேண்டும்.
4. சுதிப்பெட்டி, தாளம் அனுமதிக்கப்படும்
5. கடந்த ஆண்டு இறுதிப் போட்டிகளில் முதற்பரிசு பெற்றவர்கள் இவ்வாண்டு அதே பிரிவில் தனி நபர் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது. எனினும் அடுத்த மேற்பிரிவில் அல்லது குழுப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.
6. குழுப்போட்டிகளில் (GR12, GR13) ஆலயங்கள் மட்டுமே பங்கு பெறலாம். திருமுறைப் பாடல்கள் மட்டுமே பாடலாம். (நேரம் ஒரு குழுவிற்கு 6 ¿¢Á¢¼í¸û ÁðÎ§Á).
7. போட்டிகளில் பங்குபெற http://www.singaithirumurai.org என்னும் இணையத்தளத்தின் மூலம் நேரடியாக விண்ணப்பிக்கலாம்.

திருமுறை ஓதும் போட்டிகள்

| பிரிவு | பங்குபெற இயல்வோர் | நாள் நேரம் | போட்டிக்குரிய பாடல்கள் (ஒலி நாடாவைக் கேட்க) |
|---|---|---|---|
| **R1** | 2.1.2004க்கும் 1.1.2006க்கும் இடையே பிறந்தவர்கள் | 27-6-09. 8.30AM | 1. மடையில் வாளை பாய<br>2. நங்கடம்பனைப் பெற்றவள்<br>3. பொன்னார் மேனியனே<br>4. உலகெலாம் உணர்ந்து |
| **R2** | 2.1.2003க்கும் 1.1.2004க்கும் இடையே பிறந்தவர்கள் | 27-6-09. 8.30AM | |
| **R3** | 2.1.2002க்கும் 1.1.2003க்கும் இடையே பிறந்தவர்கள் | 27-6-09 10.30AM | 1. நன்றுடையானை<br>2. பனைக்கை மும்மத வேழம்<br>3.இத்தனை யாமாற்றை அறிந்திலேன்<br>4. சிவசிவ என்கிலர் தீவினையாளர்<br>5. சிவனடியே சிந்திக்கும் திரு |
| **R4** | 2.1.2001க்கும் 1.1.2002க்கும் இடையே பிறந்தவர்கள் | 27-6-09 10.30AM | |
| **R5** | 2.1.2000க்கும் 1.1.2001க்கும் இடையே பிறந்தவர்கள் | 27-6-09 10.30AM | |
| **R6** | 2.1.1999க்கும் 1.1.2000க்கும் இடையே பிறந்தவர்கள் | 27-6-09 2.30PM | 1. வாசி தீரவே காசு நல்குவீர்<br>2. வீடலால வாயிலாய<br>3. அந்தியும் நண்பகலும்<br>4. அம்மையே அப்பா<br>5. அஞ்செழுத்தும் கண்டீர் |
| **R7** | 2.1.1998க்கும் 1.1.1999க்கும் இடையே பிறந்தவர்கள் | 27-6-09 2.30PM | |
| **R8** | 2.1.1997க்கும் 1.1.1998க்கும் இடையே பிறந்தவர்கள் | 27-6-09 2.30PM | |
| **R9** | 2.1.1995க்கும் 1.1.1997க்கும் இடையே பிறந்தவர்கள் | 2-5-09. 8.30AM | 1. என்ன புண்ணியம்<br>2. இல்லக விளக்கது<br>3. உரைப்பார் விளக்கது<br>4. சொல்லாண்ட சுருதிப்பொருள்<br>5. உள்ளம் பெருங்கோவில் |
| **R10** | 2.1.1993க்கும் 1.1.1995க்கும் இடையே பிறந்தவர்கள் | 2-5-09 8.30AM | |
| **R11** | 2.1.1993க்கு முன்பிறந்தவர்கள் | 2-5-09 8.30AM | பஞ்ச புராணம் (விரும்பிய பாடல்கள்) |
| **GR12 குழுப் போட்டி** | மேற்படி பிரிவு R3-R8ஐச் சேர்ந்துவர்கள் (6 முதல் 8 பேர் வரை) | 27-6-09 3.30PM | திருமுறைப் பாடல்கள் மட்டும் |
| **GR13 குழுப் போட்டி** | மேற்படி பிரிவு R9-R11ஐச் சேர்ந்துவர்கள் (6 முதல் 8 பேர் வரை) | 2-5-09 12.01PM | திருமுறைப் பாடல்கள் மட்டும் |

## II. திருமுறை வண்ணம் தீட்டும் போட்டி (C1)

9-5-09 சனிக்கிழமை, காலை 9.00- இடம்: அருள்மிகு முனீஸ்வரர் ஆலயம், குயின்ஸ்வே

1. பாலர்பள்ளி மாணவர்களுக்கு (Nursery, K1, K2) உரியது.
2. வண்ணம் தீட்டுவதற்குரிய படம் ஏற்பாட்டாளர்களால் வழங்கப்படும். அதில் போட்டியாளர்கள் தாங்கள் கொண்டு வந்துள்ள வண்ணப் பென்சில்களால் வண்ணம் தீட்ட வேண்டும்.
3. போட்டி நடைபெறும்போது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பக்கத்தில் இருத்தலோ என்னென்ன வண்ணங்கள் தீட்டவேண்டும் என்று கூறுதலோ கூடாது.

## III. திருமுறைப் பேச்சுப் போட்டி- 4-7-09 சனிக்கிழமை காலை 8.30

இடம்: அருள்மிகு செண்பக விநாயகர் ஆலயம்

திருமுறைப் பேச்சுப்போட்டி ஒன்பது பிரிவுகளாக நடைபெறும். குறிப்பிட்டப்பட்ட நேரத்திற்கு மேல் பேசும் பேச்சு நடுவர்களால் கருத்தில் கொள்ளப்படமாட்டாது

| பிரிவு | பங்குபெற இயல்வோர் | நாள் நேரம் | பேச்சுப் போட்டித் தலைப்புகள் (இவற்றுள் ஏதேனும் ஒன்றைப் பற்றிப் பேசலாம்) | பேசும் நேரம் |
|---|---|---|---|---|
| O1 | 2.1.2002க்கும் 1.1.2003க்கும் இடையே பிறந்தவர்கள் | 4-7-09 8.30AM | 1.திருநீலகண்ட யாழ்ப்பாணர்<br>2. திருநீற்றுப்பதிகம்<br>3. திருப்புகலூர் | 3 நிமிடங்கள் |
| O2 | 2.1.2001க்கும் 1.1.2002க்கும் இடையே பிறந்தவர்கள் | 4-7-09 8.30AM | | |
| O3 | 2.1.2000க்கும் 1.1.2001க்கும் இடையே பிறந்தவர்கள் | 4-7-09 8.30AM | | |
| O4 | 2.1.1999க்கும் 1.1.2000க்கும் இடையே பிறந்தவர்கள் | 4-7-09 9.00AM | 1.சேந்தனார்<br>2. பச்சைப்பதிகம்<br>3. திருவண்ணாமாலை | 3 நிமிடங்கள் |
| O5 | 2.1.1998க்கும் 1.1.1999க்கும் இடையே பிறந்தவர்கள் | 4-7-09 9.00AM | | |
| O6 | 2.1.1997க்கும் 1.1.1998க்கும் இடையே பிறந்தவர்கள் | 4-7-09 9.00AM | | |
| O7 | 2.1.1995க்கும் 1.1.1997க்கும் இடையே பிறந்தவர்கள் | 4-7-09 10.00AM | 1. நம்பியாண்டார் நம்பி<br>2. திருஎழுகூற்றிருக்கை<br>3. திருவிழிமிழலை | 5 நிமிடங்கள் |
| O8 | 2.1.1993க்கும் 1.1.1995க்கும் இடையே பிறந்தவர்கள் | 4-7-09 10.00AM | | |
| O9 | 2.1.1993க்கு முன்பிறந்தவர்கள் | 4-7-09 10.00AM | 1. அர்ச்சனை பாட்டேயாகும்<br>2. சிவராத்திரி | 5 நிமிடங்கள் |

## IV. திருவேடப்போட்டி 9-5-09 சனிக்கிழமை, காலை 8.30

இடம்: அருள்மிகு முனீஸ்வரர் ஆலயம், குயின்ஸ்வே

1. திருவேடப்போட்டி மூன்று பிரிவுகளாக நடைபெறும். முதல் பிரிவு பாலர்பள்ளி மாணவர்களுக்கு உரியது. இரண்டாம், மூன்றாம் பிரிவு தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு உரியது.

2. போட்டியில் கலந்துகொள்வோர் குறிப்பிட்ட நாயன்மார்களைப் போல் வேடமிட்டு மேடையில் தோன்ற வேண்டும். பொருத்தமான வேடமிட்டுத் தோன்றுபவர்களுக்கே அதிக மதிப்பெண்கள் வழங்கப்படும்.

3. ஒருவர் மட்டுமே வேடமேற்று வேடத்திற்குரிய பேச்சைப் பேச வேண்டும். ஒரு நிமிடத்திற்குள் அந்த வேடத்திற்கான பேச்சு இருத்தல் வேண்டும். அதற்குமேல் பேசுபவர்களின் கருத்து நடுவர்களால் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

4. உடம்பில் தாங்கி இருக்கும் பொருட்களைத் தவிர மேடையில் வேறு எப்பொருளும் அனுமதிக்கப்பட மாட்டாது.

திருவேடப்போட்டி

| பிரிவு | பங்குபெற இயல்வோர் | நாள் நேரம் | திருவேடப் போட்டிக்கான நாயன்மார்கள் / திருமுறை ஆசிரியர்கள் தோற்றம். |
|---|---|---|---|
| **F1** | 2.1.2003கும் 1.1.2006க்கும் இடையே பிறந்தவர்கள் | 9-5-09 8.30AM | 1. காரைக்காலம்மையார், 2. திருமூலர் 3. மங்கையர்க்கரசியார், |
| **F2** | 2.1.2000க்கும் 1.1.2003க்கும் இடையே பிறந்தவர்கள் | 9-5-09 8.30AM | 4. சேக்கிழார் 5. அதிபத்த நாயனார், 6. திருநாவுக்கரசர் |
| **F3** | 2.1.1997க்கும் 1.1.2000க்கும் இடையே பிறந்தவர்கள் | 9-5-09 8.30AM | 7. குங்குலிய கலய நாயனார் 8. சேரமான் பெருமாள் நாயனார் 9. நம்பியாண்டார் நம்பி 10. திருநீல கண்ட குயவனார் 11. திருநாளைப் போவார் 12. மெய்ப்பொருள் நாயனார் 13. நின்றசீர் நெடுமாற நாயனார் 14. நக்கீர தேவர் 15. கண்ணப்ப நாயனார் |

**V நாடகப்போட்டி 4-7-09 சனிக்கிழமை, பிற்பகல் 1.30**

இடம்: அருள்மிகு செண்பக விநாயகர் ஆலயம்

1. நாடகப்போட்டியில் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் பங்கேற்கலாம்.
2. ஆலயங்கள் மூலமாகவே இப்போட்டியில் பங்குகொள்ள இயலும். ஒவ்வொரு ஆலயமும் இரு நாடகக் குழுக்களை அனுப்ப இயலும்.
3. ஒரு நாடகக்குழுவில் நான்கிலிருந்து எட்டு நடிகர்கள் வரை இடம்பெறலாம்
4. நாடகம் 15 நிமிடங்களுக்குள் இடம்பெற வேண்டும். (நடிப்பு, அறிவிப்பு அனைத்தும் உட்பட)
5. நாடகம் தமிழ்மொழியில் நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை ஒட்டியதாக அமைதல் வேண்டும். நாயன்மார்களோடு தொடர்பு இல்லாதவற்றைப் புகுத்துதல் கூடாது.
6. நாடகம் பிற சமயங்களைச் சாடுவதாகவோ சைவசமயத்திற்குக் குந்தகம் விளைவிப்பதாகவோ இருத்தல் கூடாது.
7. நாடகத்தின் செம்மையான எழுத்துப் பிரதியை நாடகம் நடிப்பதற்கு முன்னால் ஏற்பாட்டாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அது திருமுறை மாநாட்டிற்கே சொந்தமாகும்
8. நடிப்பு, வசனம், படைப்புத்திறன், ஒலியமைப்பு, உடை அலங்காரம், மேடை அலங்காரம் முதலியவற்றின் அடிப்படையில் நாடகம் மதிப்பிடப்படும். நீதிபதிகளின் முடிவே இறுதியானது.

**VI பொது**

1. எல்லாப் போட்டிகளிலும் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. தீர்ப்பை எதிர்த்து முறையீடு செய்ய இயலாது.
2. இப்போட்டிகளில் (திருமுறை ஓதும்போட்டி பிரிவு R11, GR13 தவிர) சிங்கப்பூர்க் குடிமக்கள், நிரந்தரவாசிகள் ஆகியோர் மட்டுமே கலந்துகொள்ளலாம்.
3. போட்டிகளில் கலந்துகொள்வோர் போட்டிக்குரிய விண்ணப்பத்தாளை நிறைவு செய்து சமய வகுப்பாசிரியர் அல்லது ஆலய அதிகாரிகளின் கையொப்பத்தைப் பெற்றுக் கட்டாயமாக 18.4.09க்குள் **The Co-ordinator, Thirumurai Contest, Blk 116 # 09-249, Bedok North Road, Singapore 460116**. என்னும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். இவ்வாண்டும் இணையத்தளத்தின் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

4. மேல் விவரங்களுக்கு 62424988, 98277780, 90059454 ஆகிய எண்களுடன் தொடர்பு கொள்க. இணையத்தள முகவரி (http://www.singaithirumurai.org)

***திருமுறைகள் ஒலிக்கட்டும் திருவருள் பெருகட்டும்***
***ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம்***